தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

## சாதாரணக் கூட்டப்பொருள்

2009ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் மற்றும் உள்ளாட்சித்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 1–1–2006 முதல் திருத்திய ஊதிய விகிதம் அனுமதித்து வெளியிடப்பட்ட தமிழக அரசு அரசாணை எண் 234( Finance (Pay Cell) Department ) நாள் **1–6–2009**ஐ மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் பதிவு செய்யலாம்.

சி1. 9579/2009

**தீர்மானம் எண்: 103**

பதிவு செய்யப்பட்டது

2. இம்மாநகராட்சி ஜின் பாக்டரி ரோடு நடுநிலைப் பள்ளியில் கைத்தொழில்ஆசிரியையாக பணியாற்றி கடந்த **31–7–2007**ல் ஓய்வுபெற்ற திருமதி மு. இராமலெட்சுமி என்பவரின் பணிக்காலத்தில் அன்னாரது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ **2640/–** மற்றும் அதற்கான வட்டித்தொகை ரூ **1572/–** ஆக மொத்தம் ரூ **4212/–** அன்னாருக்கு வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** சிறப்பு சேமநலநிதி சந்தா மற்றும் வட்டித்தொகை ரூ **4212/–**ஐ கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

சி1. 9207/09

**தீர்மானம் எண்: 104**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

3. தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட ரோச் பூங்கா பராமரிப்புக்கான உரிமம் காலம் 30–6–2009இல் முடிவடைய உள்ளது. எனவே 1–7–2009 முதல் மூன்று வருடத்திற்கு ரோச் பூங்கா பராமரிப்புக்கான உரிமத்திற்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும் அது வகைக்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யும் வகைக்குரிய செலவுத்தொகையை செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுத்ததை மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 1059/2009

**தீர்மானம் எண்: 105**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

4) இம்மாநகராட்சி புதிய பேரூந்து நிலைய வணிக வளாக கடை எண் 37, 39ஐ உரிமம் பெற்ற திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவர் இம்மாநகராட்சி மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் WP 36211/2003 இல் வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் **22–6–2009**இல் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வழக்கிற்கு மாநகராட்சி சார்பாக ஆஜராகியுள்ள வழக்கறிஞர் திரு வி. ரகுபதி அவர்கள் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் சார்பாக ஆஜராகவும் அதன் வகைக்குரிய செலவுத்தொகையை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 30684/2004

**தீர்மானம் எண்: 106**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

5) இம்மாநகரட்சி சத்திரம் தெரு அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தினை திரு கிருஷ்ணமூர்த்தி என்பவர் திருமண நிகழ்ச்சிக்காக அதற்குரிய வாடகை செலுத்தி 4–6–2009 ஆம் தேதி பதிவு செய்துள்ளார். தற்போது குடும்ப சூழ்நிலை காரணமாக திருமணம் நின்று விட்டதால் வாடகையாக செலுத்திய ரூ.22,045/–ஐ திரும்ப வழங்க கோரி 2–6–2009ஆம் தேதி விண்ணப்பித்துள்ளார். திருமணத்திற்கு பதிவு செய்த பணத்தை திரும்ப வழங்குவது குறித்து மன்றம் ஏதும் முடிவு செய்யவில்லை.

எனவே 4–6–2009ஆம் தேதி திருமண மண்டபம் பதிவு செய்த திரு கிருஷ்ணமூர்த்தி என்பவர் செலுத்திய தொகை ரூ 22,045/– ஐ திரும்ப வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் முடிவு செய்யலாம்.

அ16. 8640/08

**தீர்மானம் எண்: 107**

குடும்ப சூழ்நிலை காரணமாக திருமணம் நின்று விட்டதால் மனிதாபிமான அடிப்படையில் ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) பிடித்தம் செய்து மீதித் தொகையினை திரும்ப வழங்கத் தீர்மானிக்கப்பட்டது

**6.** தூத்துக்குடி மாநகராட்சி ஜெயராஜ் ரோடு வணிகவளாக கடை எண்,27க்கு **28–05–2009**ஆம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி | வழஙகப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|
| **1** | திரு.எ.பாஸ்கர்,<br>**36**டி/**1**எ/**6**, வண்ணார் **3**ம் தெரு,<br>தூத்துக்குடி. | ரூ.**825/–**<br>(மாதவாடகை) |

| | | |
|---|---|---|
| 2 | திரு.ஜே.வி.அசோகன்,<br>2/4 அண்ணாநகர் 5ம் தெரு, தூத்துக்குடி. | ரூ.800/–<br>(மாதவாடகை) |

**அலுவலக குறிப்பு :**

மேற்படி கடை கடந்த நான்கு வருடங்களாக ஏலத்தில் போகாமல் காலியாக இருந்து வருகிறது. ஜெயராஜ் ரோடு வணிகவளாக கடை எண்.27க்கு திரு எ.பாஸ்கர் என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ. 825/– அருகில் உள்ள கடை எண் 26இன் மாதவாடகை ரூ790/–ஐவிட ரூ.35/– கூடுதலாக உள்ளது . எனவே இனிவரும் காலங்களில் நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு ஜெயராஜ் ரோடு வணிகவளாக கடை எண்.27 க்கு திரு எ.பாஸ்கர் என்பவர் கொடுத்த உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ. 825/– உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 8392/2009

**<u>தீர்மானம் எண்: 108</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

7. தூத்துக்குடி மாநகராட்சி ஜெயராஜ் ரோடு வணிகவளாக கடை எண்,22க்கு 28–05–2009ஆம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழஙகியவர் பெயர் மற்றும் முகவரி | வழஙகப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.எ.பாஸ்கர்,<br>36டி/1எ/6, வண்ணார் 3ம் தெரு, தூத்துக்குடி. | ரூ.1025– (மாதவாடகை) |
| 2 | திரு.ஜே.வி.அசோகன்,<br>2/4 அண்ணாநகர் 5ம் தெரு, தூத்துக்குடி. | ரூ.750– (மாதவாடகை) |

**அலுவலக குறிப்பு :**

ஜெயராஜ் ரோடு வணிகவளாக கடை எண்.22க்கு திரு எ.பாஸ்கர் என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ. 1025/–கொடுத்துள்ளார். மேற்படி கடையினை சுமார் நான்கு ஆண்டுகளாக உரிமம் கோர எவரும் முன் வரவில்லை. எனவே இனி வரும் காலங்களில் நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண்.22 க்கு திரு எ.பாஸ்கர் என்பவர் கொடுத்த உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ. 1025/–க்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 8392/2009

**<u>தீர்மானம் எண்: 109</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

8. தூத்துக்குடி மாநகராட்சி புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண்,21க்கு 11–02–09ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழஙகியவர் பெயர் மற்றும் முகவரி | வழஙகப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.எப்.நெகேமியா , 6 நயினார் விளை வடக்கு,<br>தூத்துக்குடி. | ரூ.1220– (மாதவாடகை) |
| 2 | திரு.சாலமோன், 7 நயினார் விளை வடக்கு,<br>தூத்துக்குடி. | ரூ1150–<br>(மாதவாடகை) |

**அலுவலக குறிப்பு :**

புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண்.21க்கு திரு எப்.நெகேமியா என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ. 1220/– கொடுத்துள்ளார் மேற்படி கடையினை சுமார் மூன்று ஆண்டுகளாக உரிமம் கோர எவரும் முன்வரவில்லை. எனவே இனிவரும் காலங்களில் நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பெருட்டு புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண்.22 க்கு திரு எப்.நெகேமியா என்பவர் கொடுத்த உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ. 1220/–க்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 8391/2009

**<u>தீர்மானம் எண்: 110</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**9.** தூத்துக்குடி மாநகராட்சி புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண்.**40**க்கு **28–05–09**ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழஙகியவர் பெயர் மற்றும் முகவரி | வழஙகப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.அ.மணிமாறன், **36**பி/**10**,டுவிபுரம் **1**ம் தெரு, தூத்துக்குடி. | ரூ.**5529**– (மாதவாடகை) |
| 2 | திருமதி.செ.உமாமகேஸ்வரி, **37**.பாண்டுரஙகன் தெரு, தூத்துக்குடி. | ரூ.**3151**– (மாதவாடகை) |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண்40க்கு திரு அ.மணிமாறன் என்பவர் கொடுத்துள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ. 5529/– அருகில் உள்ள கடை எண் 39இன் மாதவாடகை ரூ810/–ஐ விட ரூ.4719/– கூடுதலாகவும் கடை எண். 41இன் மாதவாடகை ரூ.2100/–ஐவிட ரூ.3429/– கூடுதலாக உள்ளது. எனவே புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண்40க்கு திரு . அ.மணிமாறன் என்பவர் கொடுத்துள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ. 5529/–க்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 810/2009

**<u>தீர்மானம் எண்: 111</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறையின் அரசாணை எண் 69 நாள் 15–5–09ன்படி கோவையில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2009–2010ஆம் ஆண்டிலிருந்து செலுத்த வேண்டிய சந்தா தொகை ரூ 50,000/– லிருந்து ரூ 1,00,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பயிற்சி நிறுவன இயக்குநர் தமது கடித எண் ஆர்ஓசி எண் 0389/2009/அ3 / Corpn நாள் **4–6–2009** இல் மேற்படி தொகையை செலுத்த வேண்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி அரசாணைப்படி கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு ஆண்டிற்கான மாநகராட்சி பங்குத்தொகை ரூ **1,00,000**/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** 1. மேற்படி அரசாணையை பதிவு செய்யலாம்.
2. உயர்த்தப்பட்ட சந்தா தொகை ரூ 1,00,000/–ஐ செலுத்த அனுமதிக்கலாம்.

சி1. 4418/07

**<u>தீர்மானம் எண்: 112</u>**

அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது

அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது

11. இம் மாமன்ற தீர்மான எண் 301 நாள் 29–5–2008இல் பழைய பேரூந்து நிலைய கடை எண் 75, 76, 78, 79, 82, 83,87, 93,94,95,96, 109/7, 109/8, 118 ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 16, 17 மற்றும் புதிய பேரூந்து நிலைய கடை எண் 47,50,66,67,76,77,78 ஆகிய கடைகளுக்கு பெயர்மாற்றம் செய்து முந்தைய உரிமம்தாரர் பெயரிலுள்ள காலங்கடந்த வைப்புத்தொகையை வாடகையில் ஈடு செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்ற தீர்மானத்தில் பெயர்மாற்றம் செய்ய மட்டும் ஒப்புதல் வழங்கப்பட்டது. வாடகை நிலுவையை ஈடு செய்வது குறித்து ஏதும் தீர்மானத்தில் குறிப்பிடப்படவில்லை. எனவே மேலே கண்ட புதிய பேரூந்து நிலைய கடை எண் 47, 50, 66, 67, 76, 77, 78 ஜெயராஜ் ரோடு கடை எண் 16, 17 மற்றும் புதிய பேரூந்து நிலைய கடை எண்75, 76, 78, 79, 82, 83,87, 93,94,95,96, 109/7, 109/8, 118 ஆகிய 23 கடைகளுக்கு முந்திய உரிமம்தாரர் செலுத்திய காலங்கடந்த வைப்புத்தொகையில் உள்ள தொகையினை மேற்படி கடை வாடகைக்கு ஈடு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** 1. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி செயல்பட்டதை ஏற்று மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

அ16. 20404/2007

**<u>தீர்மானம் எண்: 113</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

12. இம்மாநகராட்சி வார்டு எண் 1, போல்பேட்டை வரிவிதிப்பு எண் 12217க்கு 2000–2001 இரண்டாம் அரையாண்டிற்கு சொத்துவரி ரூ 128/– வீதம் மனுதாரரால் இரண்டு முறை செலுத்தப்பட்டுள்ளது.

எனவே கூடுதலாக செலுத்தப்பட்ட சொத்துவரி ரூ 128/–ஐ காலங்கடந்த வைப்புநிதிக் கணக்கில் எடுத்துச் செல்லப்பட்டதால் அதனை திருமதி என். ராஜலெட்சுமி க/பெ பி. நடராஜன் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** **மா**மன்றம் அனுமதிக்கலாம்.

அ2. 2271/09

**<u>தீர்மானம் எண்: 114</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

13. ஒப்பந்தக்காரர் திரு விஜயன் என்பவர் பல்வேறு பணிகளுக்கு தான் மாநகராட்சிக்கு செலுத்திய முன் வைப்புத்தொகையை திரும்ப வழங்க கேட்டுள்ளார். அன்னார் செலுத்திய முன்வைப்புத்தொகை ரூ 2905/– காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. அதனால் அத்தொகையை திரும்ப வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் அதனை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** **மா**மன்றம் அனுமதிக்கலாம்.

இ5. 4398/09

**<u>தீர்மானம் எண்: 115</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வல்லநாடு தலைமை நீர்பணியிடம் மற்றும் இராஜாஜி பூங்கா நீர்உந்து நிலையம் ஆகிய இரண்டும் உயர்மின் அழுத்த இணைப்பில் மின்சாரக் கட்டணம் நிலுவையின்றி மாநகராட்சியால் மின்சார வாரியத்திற்குச் செலுத்தப்பட்டு வருகின்றது. இதில் வல்லநாடு தலைமை பணியிடத்திற்கு மட்டும் (மின் இணைப்பு எண் HTB (No.64) 2004ம் ஆண்டில் மார்ச் முதல் ஆகஸ்டு வரையிலான 6 மாதம் அப்போதைய நகராட்சியின் கடும் நிதி நெருக்கடி

காரணமாக மின்சாரக் கட்டணம் செலுத்தாமல் நிலுவைத் தொகையாக இருந்ததை 2005–06, 2006–07, 2007–08, 2008–09 ஆகிய நிதி ஆண்டுகளில் 12வது நிதிக்குழு திட்டத்தில் ரூ.54,31,669/– செலுத்தப்பட்டு விட்டது. இதுநாள்வரை (upto date) மின்வாரியத்திற்கு நிலுவையின்றி அந்த அந்த மாதமே மின்கட்டணம் செலுத்தப்பட்டு வருகின்றது. மின்சார வாரியத்திற்கு அவ்வப்போது செலுத்தப்படும் தொகைகளை பாக்கி தொகையில் வரவு வைத்து கொண்டு தற்போது தூத்துக்குடி மாநகராட்சி கடந்த 2004ம் ஆண்டில் செலுத்தாமல் தாமதமாக செலுத்தியதற்காக தாமதக்கட்டணமாக, வட்டித்தொகையாக (குண்டத் தொகை) இதுநாள்வரை ரூ.47,55,919/– செலுத்தக் கோரி மின்சாரவாரியத்தால் 5.3.09ம் தேதியிட்ட கடிதம் எண் 35400/கஅ/வ.ஒ.பி/உ1கோ 21/2007 வரப்பெற்றுள்ளது. மேற்கண்டவாறு தற்போது நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளபடி தொகை அனைத்தும் வட்டித் தொகையாகும்.

எனவே மேற்கண்ட தொகை செலுத்த இயலாத அளவிற்கு நிதி நெருக்கடி உள்ளதாலும், வியாபார நோக்கம் ஏதும் இன்றி பொதுமக்களுக்கு சேவை செய்யும் அத்தியாவசிய பணியான குடிநீர் விநியோகம் செய்யும் பணியினை கவனத்தில் கொண்டு மேற்கண்ட வட்டித்தொகையான (காலதாமத தண்டத் தொகை) மேற்கண்ட ரூ.47,55,919/–ஐ தள்ளுபடி செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மாமான்றம் அனுமதிக்கலாம்.

மா.ந.க.எண்.21732/இ3/06

**<u>தீர்மானம் எண்: 116</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

15. இம்மாநகராட்சி வார்டு எண் 41, டூவிபுரம் மேற்கு கதவு எண் 351/1பி/2எ என்ற முகவரிக்கு திருமதி ஈஸ்வரி என்பவர் புதிய குடிநீர் குழாய் இணைப்பு வேண்டி 25.07.2005இல் விண்ணப்ப எண் 458இல் செலுத்தியுள்ளார். அன்னார் மேற்படி வீட்டிற்கு கதவு எண் 30டி/1பி/2ஏ, என்ற முகவரிக்கு செலுத்துவதற்கு பதில் 351/1பி/2ஏ என்ற வீட்டிற்கு வைப்புத் தொகை செலுத்தியுள்ளார். மேலும் அன்னார் சரியான கதவு எண் 30/1பி/2ஏ, என்ற முகவரிக்கு 20.11.07இல் குடிநீர் விநியோக இணைப்பு எண் 458/05இல் குழாய் இணைப்பு பெற்றுள்ளார். எனவே அன்னார் தவறுதலாக செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.3000/–ஐ திருமதி ஈஸ்வரி என்பவர்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மாமான்றம் அனுமதிக்கலாம்.

இ3/1069/09

**<u>தீர்மானம் எண்: 117</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

16. இம்மாநகராட்சி வார்டு எண் 5, போல்பேட்டை கதவு எண் 111/11எஸ்/2 என்ற முகவரிக்கு திருமதி காந்திமதி அம்மாள் என்பவர் புதிய குடிநீர் குழாய் இணைப்பு வேண்டி 13.08.08இல் விண்ணப்ப எண் 1000இல் செலுத்தியுள்ளார். அன்னார் ஏற்கனவே தாம் குடிநீர் விநியோக இணைப்பு எண் 206/96இல் இணைப்பு பெற்ற மேற்படி வீட்டிற்கு வைப்புத்தொகை செலுத்தியுள்ளார். எனவே அன்னார் கூடுதலாக செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.3000/–ஐ திருமதி காந்திமதி அம்மாள் என்பவர்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மாமான்றம் அனுமதிக்கலாம்.

இ3/24269/08

**<u>தீர்மானம் எண்: 118</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

17. தூத்துக்குடி மாநகராட்சி பாளைரோடு வணிகவளாக கடை எண் 10க்கு 19.06.2009ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி | வழங்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.எஸ். வேலு,<br>55சி, டுவிபுரம் 2ம் தெரு, தூத்துக்குடி. | ரூ.2600/–<br>(மாதவாடகை) |
| 2 | திரு ஜே.வி.அசோகன்,<br>39,பாஸ்ரதாஸ் நகர் 1வது தெரு, தீடிர் நகர், மதுரை. | ரூ.2901/–<br>(மாதவாடகை) |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

முந்தைய ஏலதாரர் திரு சகாயராஜ், வாடகையினை ஒழுங்காக செலுத்தாததினால் மேற்படி கடை பூட்டி சீல் வைக்கப்பட்டது. மாமன்ற தீர்மான எண் 86 நாள் 29.05.2009இல் பொது ஏலத்தில் விட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் பாளைரோடு வணிக வளாக கடை எண் 10க்கு திரு ஜே.வி.அசோகன் என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ.2901/– மேற்படி கடையின் முந்தைய மாத வாடகை ரூ.2855/– விட ரூ.46/– கூடுதலாக உள்ளது. மேலும் இனிவரும் காலங்களில் நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு பாளைரோடு வணிகவளாக கடை எண் 10க்கு திரு ஜே.வி.அசோகன் என்பவர் கொடுத்த உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ.2901/– உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/10105/2009

<u>**தீர்மானம் எண்: 119**</u>

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18) தூத்துக்குடி மாநகராட்சி 12வது நிதி பரிந்துரையின் கீழ் சாலை மற்றும் வடிகால் மராமத்து செய்வதற்கு 2008–09 நிதி ஒதுக்கீடு திட்டத்தின் கீழ் ரூ.26,29,238/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மன்றம் தனது தீர்மான எண் 181 நாள் 28.11.2008ம் தேதியில் கீழ்க்கண்ட 3 பணிகள் எடுத்து செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | ஜெயராஜ் சாலை வடக்கில் உள்ள சாலையை மேம்பாடு செய்தல் | 6.70 |
| 2. | மீனாட்சிபுரம் தெற்கு பகுதியில் உள்ள சாலை மேம்பாடு செய்தல் | 6.00 |
| 3. | பாலவிநாயகர் கோவில் தெருவில் மேல்பக்கம் உள்ள சாலையை மேம்பாடு செய்தல் | 14.00 |
| | | 26.70 |

மேற்கண்ட பணி செய்து முடிக்கப்பட்ட தொகை ரூ.24,23,867/–. எனவே மீதம் உள்ள தொகை ஏற்கனவே பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணியினை மேற்கண்ட திட்டத்தின் கீழ் ஈடு செய்யலாம்.

1. கீழரதவீதி தெரு சாலை மேம்பாடு செய்யும் பணி ரூ.2,15,000/–

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> மாமான்றம் அனுமதிக்கலாம்.

இ1/26600/08

<u>**தீர்மானம் எண்: 120**</u>

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

19) இம்மாநகராட்சி வார்டு எண் 1, 2, 4, 5, 6, 14, 16, 39 மற்றும் 41 ஆகிய பகுதிகளில் டிரை சைக்கிள் 42 எண்ணம் விநியோகம் செய்திட IHSDP திட்டத்தின் கீழ் 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.36,00,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | மதுரை கிழக்கு அக்ரோ எஞ்சினியரிங் | ரூ.19,200/– (each) | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | ஸ்ரீவினாயகா இன்டஸ்ட்ரீஸ் | ரூ.21,000/– (each) | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவான மதுரை கிழக்கு அக்ரோ எஞ்சினியரிங் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.270/08–09

**<u>தீர்மானம் எண்: 121</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

20) இம்மாநகராட்சி வார்டு எண் 1, 2, 4, 5, 6, 14, 16, 39 மற்றும் 41 ஆகிய பகுதிகளில் டம்பர் பிளேசர் பின் 46 எண்ணம் விநியோகம் செய்திட IHSDP திட்டத்தின் கீழ் 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.36,00,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | ஸ்ரீவினாயகா இன்டஸ்ட்ரீஸ் | ரூ.59,950/– (each) | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு மதுரை கிழக்கு அக்ரோ எஞ்சினியரிங் | ரூ.65,000/–( each) | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு குறைவானதுமான ஸ்ரீவினாயகா இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.270/08–09

**<u>தீர்மானம் எண்: 122</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

21) இம்மாநகராட்சி கே.வி.கே.நகர் பகுதியில் IHSDP திட்டத்தின் கீழ் மழைநீர் வாறுகால் அமைக்கும் பணிக்கு 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.4,00,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு எம்.பெருமாள் | மதிப்பீட்டிற்கு 0.19% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு பி.ஜோதிமணி | மதிப்பீட்டிற்கு 0.61% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.19% அதிகமானதுமான திரு எம். பெருமாள் என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.259/08–09

**<u>தீர்மானம் எண்: 123</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

22) இம்மாநகராட்சி கிருஷ்ணராஜபுரம் பகுதியில் IHSDP திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.3,00,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திருமதி ஜே.பொன்மணி | மதிப்பீட்டிற்கு 0.20% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எம்.பெருமாள் | மதிப்பீட்டிற்கு 1.30% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.20% அதிகமானதுமான திருமதி ஜே.பொன்மணி என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.257/08–09

**<u>தீர்மானம் எண்: 124</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

23) இம்மாநகராட்சி மங்களாபுரம் பகுதியில் IHSDP திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.3,30,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திருமதி ஜே.பொன்மணி | மதிப்பீட்டிற்கு 0.19% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு பி.ஜோதிமணி | மதிப்பீட்டிற்கு 0.61% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.19% அதிகமானதுமான திருமதி ஜே.பொன்மணி என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.261/08–09

**<u>தீர்மானம் எண்: 125</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

24) இம்மாநகராட்சி குருஸ்புரம் பகுதியில் IHSDP திட்டத்தின் கீழ் தார்சாலை அமைக்கும் பணிக்கு 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள்

வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.8,00,000/— அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திருமதி எஸ்.சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு 0.07% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு 1.37% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**அலுவலகக்குறிப்பு:**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.07% அதிகமானதுமான திருமதி எஸ். சாந்தி அருட்லா நிர்மலா தேவி என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.265/08—09

**தீர்மானம் எண்: 126**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

25) இம்மாநகராட்சி திரேஸ்புரம் பகுதியில் IHSDP திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.8,00,000/— அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 5.89% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ்.ரம்போலா | மதிப்பீட்டிற்கு 4.31% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**அலுவலகக்குறிப்பு:**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.31% அதிகமானதுமான திரு எஸ்.ரம்போலா என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.260/08—09

**தீர்மானம் எண்: 127**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

26) இம்மாநகராட்சி வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெருவிலுள்ள மாநகராட்சி பள்ளிக்கூடம் கூடுதல் கட்டிடம், கல்வி நிதி திட்டத்தின் கீழ் அமைக்கும் பணிக்கு 03.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மன்றம் தனது தீர்மான எண் 415 தேதி 18.07.2008ல் ரூ.20,00,000/— அனுமதி வழங்கியுள்ளது. அனுமதிக்கப்பட்ட தொகையில் ரூ.5,00,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு எஸ்.சுரேஷ் ஜெயக்குமார் | மதிப்பீட்டிற்கு 4.74% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக்குறிப்பு:**

வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு

4.74% அதிகமானதுமான திரு ஜே.சுரேஷ் ஜெயக்குமார் என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.255/08–09

**<u>தீர்மானம் எண்: 128</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

27) இம்மாநகராட்சி குருஸ்புரம் பகுதியில் IHSDP திட்டத்தின் கீழ் பல்நோக்கு சமுதாயகூடம் அமைக்கும் பணிக்கு 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.26,00,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு கே. வேலாயுதம் | மதிப்பீட்டிற்கு 4.94% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு வி. தங்கராஜ் | மதிப்பீட்டிற்கு 5.57% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.94% அதிகமானதுமான திரு கே.வேலாயுதம் என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.272/08–09

**<u>தீர்மானம் எண்: 129</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

28 இம்மாநகராட்சி திரேஸ்புரம் பகுதியில் IHSDP திட்டத்தின் கீழ் பல்நோக்கு சமுதாய கூடம் அமைக்கும் பணிக்கு 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.26,00,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு எஸ்.சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 4.42% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 4.03% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.03% அதிகமானதுமான திரு எஸ்.ரம்போலா என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.271/08–09

**<u>தீர்மானம் எண்: 130</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

29) இம்மாநகராட்சி வார்டு எண் 6, 16, 14, 1, 41 பகுதியில் IHSDP திட்டத்தின் கீழ் இன்பார்மர் செக்டார் மார்க்கெட் மற்றும் காமன் வொர்க் செட் அமைக்கும் பணிக்கு 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.13,20,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு எஸ்.சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 5.31% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ்.ரம்போலா | மதிப்பீட்டிற்கு 4.48% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**அலுவலகக்குறிப்பு:**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.48% அதிகமானதுமான திரு எஸ்.ரம்போலா என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.273/08–09

**தீர்மானம் எண்: 131**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

30) இம்மாநகராட்சி திரேஸ்புரம் பகுதியில் IHSDP திட்டத்தின் கீழ் தார்சாலை அமைக்கும் பணிக்கு 11.03.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 64 தேதி 26.02.2009ல் ரூ.8,00,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு எஸ்.ரம்போலா | மதிப்பீட்டிற்கு 5.13% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ்.சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 4.33% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார். |

**அலுவலகக்குறிப்பு:**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.33% அதிகமானதுமான திரு எஸ்.சுதர்சன் என்பரது ஒப்பந்தப்புள்ளியினை மாமான்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.ப.எண்.267/08–09

**தீர்மானம் எண்: 132**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

31) இம்மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் பணிபுரியும் திரு பா.சந்தனகுமார், இளநிலை உதவியாளர் மாற்றுதிறன் உடையவர் (உடல் ஊனமுற்றவர்) என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில்வரித் தொகைக்கு விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169H(c)ன்படி மேற்படி திரு பா.சந்தனகுமார் (இ.நி.உ) என்ற பணியாளருக்கு 2009–2010 I அரையாண்டு முதல் தொழில்வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:** அனுமதி வழங்கலாம்.

அ10/2468/09

**தீர்மானம் எண்: 133**

2009–2010 முதல் அரையாண்டு முதல் தொழில்வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

32) தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களின் மே 2009ம் மாதத்தின் அலுவலக நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மாமான்றம் பதிவு செய்யலாம்.

சி1/5813/09

**<u>தீர்மானம் எண்: 134</u>**

பதிவு செய்யப்பட்டது

33) இம்மாநகராட்சி பகுதி பாளைரோடு மேற்கில் பகுதி II திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள எரிவாயு தகன மேடையை பராமரிக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (ந.நி3) அரசாணை எண் (நிலை) 228 நாள் 13.11.2008ல், தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பது குறித்து ஆணை பிறப்பித்துள்ளது.

எனவே இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள எரிவாயு தகன மேடையை பராமரிக்க விருப்பம் தெரிவித்து வரப்பெற்ற உமேஷ் சாரிடபிள் டிரஸ்ட், தூத்துக்குடி ஸ்தாபனத்திற்கு அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், வழிகாட்டுதல் நெறிமுறைகளுக்கும் மற்றும் இதர சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டும், 26.02.09ம் தேதிய 52ம் எண் மாமன்றத் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்ட விபரப்படி மேற்படி ஸ்தாபனத்திற்கு எரிவாயு தகன மேடையை பராமரிக்க மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

உமேஷ் சாரிடபிள் டிரஸ்ட், தூத்துக்குடி, ஸ்தாபனத்திற்கு எரிவாயு தகன மேடையை பராமரிக்க அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும், அவ்வப்போது நடைமுறையில் வகுக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ1/17234/06

**<u>தீர்மானம் எண்: 135</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

மாமன்றம், தூத்துக்குடி.
நாள்: **19–06–2009**

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி